உரிமை ! தொழில் !! கொஞ்சம் வாழ்க்கை!!!

# உரிமை குரல்

ஓட்டுநர் தொழிற்சங்கம்

பதிவு எண் : 532/KPM

எண்.3, கட்டத்தொட்டி சந்து, புது மார்க்கெட், மேற்கு தாம்பரம், சென்னை – 45.

E-mail Id : tazahir@yahoo.in

T.A.ஜாஹீர் ஹுசைன்
பொதுச்செயலாளர்

செல் : 99419 27762

**<u>தேதி: 05.08.2021</u>**

**பெறுநர்**

**மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள்**

**தலைமை செயலகம்**

**சென்னை – 600009**

**பெரும் மதிப்பிற்குரிய அய்யா அவர்களுக்கு**

வணக்கம் எங்கள் சங்கத்தின் சார்பாகவும் ஓட்டுநர் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாகவும் கடந்த 09.07.2021 அன்று போக்குவரத்து கூடுதல் ஆணையர் அவர்கள் தலைமையில் ஓலா மற்றும் உபேர் நிறுவனங்கள் தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது

அந்த பேச்சுவார்த்தையில் ஓலா மற்றும் உபேர் நிறுவனங்கள் போக்குவரத்து கூடுதல் ஆணையர் அவர்களிடம் அளித்த வாக்குறுதிகளின் படி ஓட்டுனர் தொழிற்சங்கங்களின் எந்த ஒரு கோரிக்கைகளையும் இதுவரை நிறைவேற்றவில்லை

குறிப்பாக எஸ்யூவி ரக வாகனங்களுக்கு சடான் டூட்டி வழங்குவது சடான் ரக வாகனங்களுக்கு ஹட்ச்பேக் டூட்டி வழங்குவது போன்றவற்றை நிறுத்த வேண்டும் அந்தந்த ரக வாகனங்களுக்கு அந்தந்த ரக டூட்டிகள் மட்டுமே வழங்க வேண்டும்

தற்போது இருக்கின்ற பெட்ரோல் டீசல் விலைக்கு ஏற்ப கட்டணத்தை உயர்த்தி வழங்க வேண்டும் ஆகிய முக்கிய கோரிக்கைகள் குறித்தும் இதுவரை ஓலா மற்றும் உபேர் நிறுவனங்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை

இதனால் ஓட்டுநர் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது எனவே இதுகுறித்து உடனடியாக ஓலா மற்றும் உபேர் நிறுவனங்களை போக்குவரத்து ஆணையர் அழைத்து மீண்டும் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி ஓட்டுனர் கோரிக்கைகளை போர்க்கால அடிப்படையில் நிறைவேற்ற தாங்கள் உத்தரவிட வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்

இப்படிக்கு.